**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 300 මට්ටම - 2023
**இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் 2023**

**Bachelor of Arts (External-New Syllabus) Examination 300 Level - 2023**

# ECNE 301 – Sri Lankan Economy

**அறிவுறுத்தல்கள்**

1. இவ்வினாத்தாளானது 06 வினாக்களைக் கொண்டுள்ளது. **ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம்** விடையளிக்குக.
2. தெளிவற்ற கையெழுத்திற்காக மதிப்பெண்கள் கழிக்கப்படும்
3. நேரம்: **மூன்று (03)** மணித்தியாலயங்கள் மாத்திரம்.

---

1. (i). "சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் விவசாயத்துறை எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனைகளில் ஒன்றாக அரசாங்கத்துறையில் சார்ந்திருத்தலானது காணப்படுகின்றது." ஆராய்க. (10 புள்ளிகள்)

   (ii). இலங்கையில் சேவைத்துறையின் பிரதான பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புக்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

2. (i). பின்வரும் கூற்றினை நுணுக்கமாக மதிப்பீடு செய்க. "பிராந்தியத்திலுள்ள ஏனைய அயல்நாடுகளுடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதில் இலங்கையானது மிகக்கீழான நிலையில் செயற்பட்டுள்ளது." (12 புள்ளிகள்)

   (ii). நாட்டிற்குள் அதிகளவான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கு சாத்தியமான கொள்கைகளைப் பரிந்துரைகளை முன்வைக்குக. (08 புள்ளிகள்)

3. (i). கடந்த 25 வருட காலத்தில் இலங்கையின் கைத்தொழில் துறையின் பிரதான கூறுகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   (ii). பின்வரும் கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. "1977இற்குப் பின்னரான பொருளாதார சீர்திருத்தங்கள் இலங்கையில் குறிப்பிடத்தக்கவகையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு வழிவகுக்கவில்லை." (15 புள்ளிகள்)

4. (i). 1977இல் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார தாராளமயப்படுத்தல் சீர்திருத்தங்களிற்குப் பின்னர் ஏற்றுமதிகள் (07 புள்ளிகள்)

பல்வகைப்படுத்தப்பட்டமைக்கான சான்றாதாரம் யாது?

(ii). 1977இற்குப் பின்னர் இறக்குமதிக் கட்டமைப்பு எவ்வாறு மாற்றமடைந்தது? அதற்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iii). "1978இன் பொருளாதார தாராளமயப்படுத்தல் சீர்திருத்தங்களிற்குப் பின்னர் இலங்கையின் வர்த்தகப் பற்றாக்குறை குறைவடைந்துள்ளது." இக்கூற்று சரியானதா / தவறானதா? பொருத்தமான சான்றாதாரங்களைப் பயன்படுத்தி உமது விடையினை நியாயப்படுத்துக. (08 புள்ளிகள்)

5. (i). "இலங்கையின் உயர்ந்தளவிலான நலன்புரிச் செலவுகளின் தாக்கமானது மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணின் (HDI) உயர்பெறுமதியைப் பிரதிபலிக்கின்றது." இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? ஏன்? இல்லையெனில் ஏன்? பொருத்தமான சான்றாதாரங்களைப் பயன்படுத்தி உமது விடையினை நியாயப்படுத்துக. (10 புள்ளிகள்)

(ii). "தற்போதுள்ள அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களை (SOEs) 'அரச சுமைகளிலிருந்தும்' மற்றும் தனியார்மயமாக்கல் சீர்திருத்தங்களினூடாக 'மதிப்பினை உருவாக்குபவர்களாக' உருமாற்றுவது இலங்கையின் நீண்டகால சமூக பொருளாதார அபிவிருத்தியின் வசதியாளர்களாக வெளிப்படுத்தவதற்கு இன்றியமையாததாகும்." ஆராய்க. (10 புள்ளிகள்)

6. (i). இலங்கையின் தற்போதய பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்களை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

(ii). இலங்கையின் தற்கால வெளிநாட்டு நாணயமாற்று விகித நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியமான தீர்வுகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

***********************************